2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் மோசமான நிலைமையில் விரைவிலே ஏற்படவிருக்கிறது. எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும், அரசின் கவனத்தையும் ஈர்ப்பதற்கு நான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று காலையில்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து கேள்வி கேட்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின்* notice*-க்கு கொடுத்தனுப்பியிருக்கிறேன். பதில் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அது நாளை எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

(ஆ) ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகள் கட்ட உத்தேசித்திருப்பது

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டத்தில், நந்திதுர்காவில் உற்பத்தியாகும் பாலாறு, கர்நாடக மாநிலத்தில் 93 கிலோ மீட்டரும், ஆந்திர மாநிலத்தில் 33 கிலோ மீட்டரும், தமிழகத்தில் 222 கிலோ மீட்டரும் பயணித்து, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் உள்ள கூவத்தூரில் வங்கக் கடலில் கலக்கிறது. வாணியம்பாடி, புள்ளூர் முதல் காஞ்சிபுரம் மாவட்டம், கூவத்தூர் வரை சற்றேறக்குறைய 4½ இலட்சம் எக்டர் நிலம் பாசன வசதி பெறுகிறது. வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் சென்னை மாவட்டம் என ஐந்து மாவட்டங்களில் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக பாலாறு விளங்கி வருகிறது. இந்தப் பாலாற்றுநீர் சுமார் 1½ கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. ஆந்திர அரசு தனது மாநிலத்தில் 33 கிலோ மீட்டர் தூரம் பயணிக்கக்கூடிய பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே கட்டியுள்ள 21 தடுப்பணைகளைப்*